முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1324

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.05.2023, திங்கட்கிழமை

1. தர்மத்தின் காவலனே அரங்கா போற்றி
தயவை ஊட்டும் மாதவராஜனே போற்றி
கர்மவினை போக்குகின்ற குருராஜனே போற்றி
கலியுகத்தைக் காக்கின்ற எந்தன் அவதாரனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும்
புகலுவேன் அரங்கனுக்கு ஆற்றல்பட
ஞான அறிவுரை ஆசி தன்னை
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் முதல் நாள், 15.05.2023, திங்கட்கிழமை)
அருளுவேன் அரங்கன் பலம் உலகம் அறிய
3. அறியவே அரங்கன் என் சக்தியாக இந்த கலியுகத்தில்
அனைத்து மக்களையும் காக்கும் அம்சமாக அவதாரம் எடுத்திருக்க
அறியாமையில் இருக்கும் உலக மக்கள்
அரங்கனை நோக்கி வந்து அணுகித்தெளிந்து
4. தெளிந்து திருவடி தீட்சை பெற்று
திடமுற அரங்கனைத் தொடர்ந்தால் போதும்
வறுமை பசிப்பிணி வாட்டுகின்ற கர்மவினை
வல்லமையான கலி இடர்களும் மாயைகளும் அகன்றோடி
5. தருகின்ற குணமும் தர்மவான் என்கின்ற
தனிப்பெரும் தகுதியும் பெருகி இனிதே
ஆறுமுகன் என் ஆசிபட
அனைவருமே அரங்கனால் ஞானிகளாக
6. வருமுலகில் மாற்றம் செய்யப்பட்டு வையகத்தைக் காக்கும் சக்திகளாக
வரங்கள் பல கூடி இனிதே
பெருமைமிக்க ஞானலோகம் படைத்து
பேருலகை ஞானிகளே ஆள அருள்புரிவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–